# ஆம் முதல்வன்

டாக்டர் ம.அ. வேங்கடக்ருஷ்ணன்

"குளப்படியில் தேங்கினால் குருவி குடித்துப்போம். வீராணத்தில் தேங்கினால் அது லோகமடைய உஜ்ஜீவிக்கும்" என்பது எம்பெருமானார் அவதரிப்பதற்கு நெடுநாள்கள் முன்னரே நாதமுனிகள் அருளிச் செய்த வார்த்தைகளாகும்.

எனவே அர்த்த விசேஷங்களை யெல்லாம் எம்பெருமானாரிடம் கொண்டு சேர்க்க வேண்டுமென்றுதான் ஆளவந்தா ருடைய சிஷ்யர்கள் பாடுபட்டார்கள்.

கலியானது கெடும் வண்ணமாக ஒருத்தர் பவிஷ்யதாசார்யராக அவதரிக்கப் போகிறாரென்று நம்மாழ்வார் "பொலிக பொலிக பொலிக" எனும் திருவாய்மொழி அருளிச்செய்தபோது காண்பித்தார். த்ரிதண்ட ஹஸ்தராய் காஷாயம் அணிந்து யஞ்ஞோபவீதங்களோடு இருந்த அந்தத் திருமேனியைத்தான் பிற்காலத்தில் விக்ரஹமாகப்பெற்று மதுரகவிகள் ஆராதித்து வந்தார்.

"பூதங்கள் மண்மேல்" என்று சொன்னதற்குச் சரியாக பூதபுரியில் அவதரித்தார் ராமானுசர்.

இவர்தான் பவிஷ்யதாசார்யராக இருப்பாரோ என்று அறிந்து கொள்ளவே ஆளவந்தார் காஞ்சீபுரம் எழுந்தருளினார். அங்கு திருக்கச்சி நம்பிகள் இவர்தான் ராமானுசர் என்று அடையாளம் காட்டிய உடன் அவரே பவிஷ்யதாசார்யர் என்று ஆளவந்தார் உணர்ந்து கொண்டு 'ஆம் முதல்வன்' (இவனே தர்சன முதல்வன் ஆகட்டும்) என்று கடாக்ஷித்தருளினார்.

"ஆம் முதல்வன் இவன் என்று தற்றேற்றி" என்ற திருவாய்மொழி (7–9–3) பாசுரத்தின் வியாக்யானத்தில் "திருப் புற்றுக்குக் கிழக்கே கரியமாணிக்காழ்வார் திருமுன் பின்ஸோபானத்திலே ஆளவந்தார் எழுந்தருளியிருக்க, உடையவர் திருப் புற்றுக்குக் கிழக்காக எழுந்தருளியிருக்கிற வரைக் கண்டு, 'ஆம் முதல்வன்' என்று அருளிச்செய்தாராம்" என்று நம்பிள்ளை அருளிச்செய்துள்ளார்.

ஸ்ரீராமானுசர் இளம் வயதில் யாதவ ப்ரகாசர் என்ற அத்வைதி வித்வானிடம் கல்வி கற்றார். 'கப்யாஸம் புண்டரீகம் ஏவமக்ஷிணீ' என்ற சாந்தோக்ய உபநிஷத் வாக்யத்திற்கு அர்த்தம் சொல்லும்போது யாதவப்ரகாசர் "குரங்கின் பின்பாகம்போல் சிவந்த தாமரையைப் போன்ற கண்களை உடையது ப்ரம்மம்" என்று கூறினார். அப்போது யாதவ ப்ரகாசருக்கு எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார் ராமானுசர். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகி யாதவ ப்ரகாசரின் தொடையில் சுரீரென்று விழுந்தது. தகித்தது தொடை. வருத்தம் உஷ்ணத்தில் தெரிந்தது. "ஏன் கண்ணீர் விடுகிறாய்?" என்றார் யாதவப்ரகாசர். "எம்பெருமான் கண்களுக்கு உபமானமாகச் சொல்லப்படும் தாமரையை இப்படிக் குரங்கின் பின்பாகத்திற்கு ஒப்பிடலாமா?" என்றார் ராமானுசர். "சாந்தோக்ய உபநிஷத்தில் இருக்கும் 'கப்யாஸம்' என்ற சொல்லுக்கு வேறு எப்படிப் பொருள் கொள்வது? 'கபே: ஆஸம்' என்று கொண்டால் குரங்கின் பின்பாகம் என்றுதானே பொருள் கிடைக்கும்" என்றார் யாதவப்ரகாசர்.

"கப்யாஸம் என்பதற்கு இப்படிப் பொருள் கொள்ளலாமே! கம் பிபதி இதி = கபி: –

சூரியனுக்கு கபி: என்று பெயர். க:—ஜலம். ஜலத்தை சூரியன் க்ரஹிக்கிறான். கம் பிபதி இதி கபி: — கபி: = சூரியன்; ஆஸம் என்றால் விகாஸம் அந்த சூரியனாலே மலர்த்தப்பட்ட தாமரை என்று அர்த்தம் சொல்லலாமே'' என்றார் ராமானுசர். கப்யாஸம் புண்டரீகம் — அப்பொழுது அலர்ந்த தாமரையைப் போன்ற திருக்கண்கள் எம்பெருமானுக்கு என்றே கூறவேண்டும் என்று ராமானுசர் கூறினார்.

பிற்காலத்தில் திருவரங்கம் பெரிய கோயிலுக்கு வந்த பிறகு, ராமானுசர் ஆளவந்தாருடைய சீடர்கள் ஐவரிடம் ஸம்ப்ரதாய அர்த்தங்களை காலக்ஷேபம் கேட்கத் தொடங்கினார்.

1. பெரிய நம்பிகளிடத்தில் ரஹஸ்யத்ரயம் உபதேசம் பெற்றார்.

2. திருமாலை ஆண்டானிடம் — திருவாய்மொழி காலட்சேபம் கேட்டார்.

3. திருக்கோஷ்டியூர் நம்பிகளிடம் பதினெட்டு முறை நடந்து ரகஸ்யத்ரயத்தின் அர்த்தங்களையெல்லாம் கேட்டார்.

4. திருவரங்கப்பெருமாள் அரையரிடம் திவ்ய ப்ரபந்தத்தை சந்தை சொல்லிக் கொண்டு, நல் வார்த்தைகளும், கேட்டார்.

5.திருமலை நம்பிகளிடம் சென்று ஒரு வருடகாலம் திருப்பதியில் தங்கியிருந்து ஸ்ரீராமாயணம் காலக்ஷேபம் கேட்டார்.

சிறிய வயதிலேயே உபநிஷத் அர்த்தங்களைத் தவறாகச் சொன்ன யாதவ ப்ரகாசரை திருத்திய ராமானுசர் ஆசார்யர்கள் ஐவரிடம் காலக்ஷேபம் கேட்க வேண்டிய அவசியமென்ன? முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு, பிறகுதான் பின்னோருக்கு அதனைப் பேச வேண்டும் என்ற முறையை அனுசரிப்பதற்காகவே அப்படிச் செய்தார்.

முதன்முதலில் ராமானுசர் திருமலைக்கு எழுந்தருளிய போது அவரை அனந்தாழ்வான், திருமலை நம்பிகள் முதலியோர் வரவேற்றதாக ஆறாயிரப்படி குருபரம்பரையில் கூறப்படுகிறது. அப்போதுதான் ராமானுசரும் திருப்பதியில் ஒருவருடம் தங்கித் திருமலை நம்பிகளிடம் ஸ்ரீராமாயண காலக்ஷேபம் கேட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது.

கி.பி.1017ல் எம்பெருமானார் அவதரித்தார். கி.பி.1053ல் அனந்தாழ்வான் அவதாரம். 36வயது சிறியவர் அனந்தாழ்வான். அவர் ஏறக்குறைய இருபது வயதில் இராமானுஜரிடம் சிஷ்யராக வந்து சேர்ந்திருக்கலாம் என்று கொண்டு பார்த்தால், எம்பெருமானார் திருமலைக்கு எழுந்தருளித் திருமலை நம்பியிடம் காலக்ஷேபம் கேட்டபோது ராமானுசருக்கு ஐம்பத்தைந்து வயதிற்கு மேல் ஆகியிருக்க வேண்டும். இளம் வயதிலேயே உபநிஷத் வாக்யங்களுக்கு விசேஷார்த்தங்கள் கூறிய ஐம்பத்தைந்து வயதிற்கும்மேல் ஸ்ரீராமாயண காலக்ஷேபம் கேட்டார் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

அர்த்தங்களை ஸ்ரீராமானுசர் காலக்ஷேபம் கேட்டது மட்டுமல்ல. அதற்காக எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறார்! திருக்கோட்டியூர் நம்பியிடம் பதினெட்டு முறை எழுந்தருளி அர்த்தவிசேஷங்களைப் பெற்றார். திருக்கோஷ்டியூர் நம்பி, ஒருவருக்கும் இந்த அர்த்தங்கள் தெரியக் கூடாதென்று மறைத்து வைத்தார். உயர்ந்த அர்த்த விசேஷங்களை ச்ரத்தை யில்லாதவன் கேட்டானானால் தவறாகப் பொருள்கொண்டு விபரீதமாகப் போய்விடுவான். எனவே அர்த்தத்தின் சீர்மையை உணர்ந்து திருக்கோட்டியூர் நம்பி அதைப் பேணி பாதுகாத்தார்.

விலை உயர்ந்த (10 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள) ஒரு பொருளைக் குழந்தை கையில் கொடுப்பார்களா? அதன் மதிப்பை அறியாததால் அதைத் தொலைத்து விடும். யாருக்கும் உபயோகம் இல்லாமல் போய் விடும்.

எனவே அதை பத்திரமாக ரகசியமாகத்தான் வைத்திருப்பார்கள். திருக்கோட்டியூர் நம்பியும் விலைமதிப்பற்ற அர்த்தங்களை ரகசியமாகவே வைத்துக் கொண்டிருந்தார்.

அதனால்தான் ராமானுசர் கேட்ட உடனே அவருக்குத் திருக்கோட்டியூர் நம்பி உபதேசித்துவிடவில்லை. ''அடுத்தமுறை வாரும்'' என்று கூறிவிட்டார். இப்படி ஒரு முறை இரண்டு முறை அல்ல. பதினெட்டு முறை நடந்தது.

அங்கிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் ராமானுசரிடம் வந்து, ''தேவரீருக்கே இவ்வளவு சோதனைகள் என்றால் எங்களுக்கு எங்கே இந்த அர்த்த விசேஷங்கள் கிடைக்கப் போகின்றன. அர்த்த விசேஷங்கள் ஒரு வேளை உமக்குக் கிடைத்தால் எங்களை மறக்காமல் எங்களுக்கும் தேவரீர் தெரிவிக்க வேண்டும்'' என்று ப்ரார்த்தித்துக் கொண்டார்கள்.

முடிவில் பதினேழாவது முறையில் திருக்கோட்டியூர் நம்பி ''அடுத்த தடவை தண்டும் பவித்ரமுமாக நீர் மட்டுமே வாரும்'' என்றார். ஆனால் அடுத்தமுறை சென்றபோது ராமானுசர், கூரத்தாழ்வான், முதலியாண்டான் இருவரையும் அழைத்துச் சென்றார். ''உம் ஒருவரை மட்டுமன்றோ வரச்சொன்னோம்?'' என்று கேட்டார் நம்பி. ''தண்டும் பவித்திரமுமாக அன்றோ வரச் சொல்லிற்று. முதலியாண்டான் தண்டு, கூரத்தாழ்வான் பவித்ரம்'' என்றார் ராமானுசர்.

உபதேசிப்பதாகச் சொல்லியாகி விட்டது. ஆனால் ராமானுசரோ இன்னும் இரண்டுபேர்களுடன் வந்திருக்கிறார். என்ன செய்வது என்று ஆலோசித்த திருக்கோட்டியூர் நம்பி (பரமரஹஸ்யமான சரமச்லோகார்த்தத்தை உபதேசிக்காமல்) திருமந்திரத்தின் தாத்பர்யத்தை உபதேசித்தார். அதையும் தகுதியற்ற எவருக்கும் பரீக்ஷிக்காமல் உபதேசிக்கக் கூடாது என்று ஸத்யம் வாங்கிக் கொண்டு உபதேசித்தார்.

உபதேசம் பெற்ற ராமானுசர் 'இப்படிப் பட்ட அர்த்தங்களை மேலும் மறைத்து வைத்தால் ஒருவருமே இவற்றை அறிந்து கொள்ளாமல் போய்விடுவார்களே! மேலும் அவர்களுக்கு உய்வு கிடைக்காதே!' என்று நினைத்து, ஏற்கெனவே தம்மைப் பிரார்த்தித்துக் கொண்ட சிலரை அழைத்துக் கொண்டு திருக்கோஷ்டியூர் விமானத்துக்குள் சென்றார். அஷ்டாங்க விமானம் அது. ஏகாந்தமான இடமாய் அறைபோல் இருந்தது அந்த இடம். தமக்குத் திருக்கோட்டியூர் நம்பி உபதேசித்ததை அப்படியே அவர்களுக்கு அந்த இடத்தில் ஏகாந்தமாக உபதேசித்தார். அவர்களிடம் நீங்களும் ஆசையுடையோர்க் கெல்லாம் உபதேசியுங்கள் என்று கட்டளையுமிட்டார். திருக்கோட்டியூர் நம்பி காதில் இது விழுந்தது. அவருக்கு கோபம் ஏற்பட்டது. 'நீர் இப்படிச் செய்யலாமா? இதற்கு என்ன பலன் தெரியுமா?'' என்று கேட்டார். ராமானுசர் ''ஆசார்ய வசனத்தை மீறிய அடியேனுக்கு நரகம்தான் கிடைக்கும்'' என்றார் ராமானுசர். ''பின் ஏன் இப்படிச் செய்தீர்?'' என்று நம்பி கேட்க ''அடியேன் ஒருவன் நரகம் போனாலும், இத்தனை பேரும் உஜ்ஜீவனத்தை அடைவார்களே!'' என்றார் ராமானுசர்.

திருக்கோட்டியூர் நம்பி ஒருவரிடமும் சொல்லக்கூடாது என்று ஸத்யம் வாங்கிக் கொண்டார். ஆசையுடையோர்க்கு எல்லாம் உபதேசிக்க வேண்டும் என்று ஸத்யம் வாங்கிக் கொண்டார் எம்பெருமானார்.

பாருலகில் அனைவருக்கும் கூறுமென்று சொல்லவில்லை. ''பாருலகில் **ஆசையுடையோர்க்கு எல்லாம்** ஆரியர்கள் கூறும்'' என்றுதான் கூறினார் எம்பெருமானார்.

நான் நரகத்துக்கு போனாலும் இத்தனை பேர் மோக்ஷத்திற்கு போவார்கள்

என்று ராமானுஜர் சொன்னவுடன் திருக்கோஷ்டியூர் நம்பிக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. 'அடடா! இப்படிப்பட்ட பரந்த ஹ்ருதயம் எனக்கு ஏற்படலையே! ஆசார்யனுடைய நியமனத்தை மீறினால் எங்கே எனக்கு நரகம் கிடைக்குமோ என்று நான் ஒருவருக்கும் சொல்லாமல் இருந்து விட்டேன். பிறர் உய்வு பெறவேண்டும் என்ற பரந்த திருவுள்ளம் உமக்கே இருந்தது. 'எம்பெருமான் ஆர்? என்றிருந்தேன். நீர் தான் எம்பெருமானார்' என்றார்.

பிறகு திருக்கோட்டியூர் நம்பி எம்பெருமானாரைப் பார்த்து "உமக்கு மேலும் ஒரு ரஹஸ்யார்த்தம் சொல்வதாக இருக்கின்றோம். நீர் என்ன நினைத்திருக் கிறீர்?" என்று கேட்டார். அதற்கு எம்பெருமானார் "தேவரீர் உபதேசித்ததற்கு மேல் ஒரு அர்த்தம் இருக்கிறது என்று நான் நினைத்தால் தேவரீர் உபதேசத்தில் நம்பிக்கை ஏற்படவில்லை என்று பொருளாகிவிடும். ஆனால் தேவரீர் மேலும் உபதேசிக்கும் அர்த்தத்தை நான் கேட்கவில்லையானால், ஏற்கெனவே நான் கேட்ட அர்த்தமும் நெஞ்சில் படவில்லை என்றே ஆகிவிடும். எனவே தேவரீர் உபதேசிக்கும் அர்த்தத்தைக் கேட்கச் ஆவலாக இருக்கிறேன்" என்று கூறினார்.

உடனே, திருக்கோட்டியூர் நம்பி "அடுத்த தடவை கண்டிப்பாக நீர் ஒருவர் மட்டுமே வாரும்" என்றார். அப்படியே எம்பெருமானாரும் அடுத்த முறை தாம் ஒருவர் மட்டுமே சென்றார். அப்போது நம்பி "உமக்கு சரமச்லோக அர்த்தத்தை தெரிவிக்கப் போகிறேன். இது ஏற்கெனவே சொன்ன ரகஸ்யத்தை விட பரம ரகஸ்யம். இதை ஒருவருக்கும் சொல்லமாட்டேன் என்று ஸத்யம் செய்யும்" என்றார்.

"கூரத்தாழ்வானுக்கு மட்டும் அடியேனால் சொல்லாமல் இருக்க முடியாது. அவருக்கு மட்டும் சொல்ல அனுமதி ஸாதிக்க வேண்டும்" என்று கேட்டார் எம்பெருமானார். திருக்கோட்டியூர் நம்பி, "கூரத்தாழ்வானிடமும் ஒருவருடகாலம் பணிவிடை கொண்டு சோதித்துப் பிறகுதான் சொல்ல வேண்டும்" என்று கூறிவிட்டு சரமச்லோக அர்த்தத்தை எம்பெருமானாருக்கு உபதேசித்தார்.

திருக்கோட்டியூர்நம்பி உபதேசித்த சரமச்லோக அர்த்தத்தைத் தமக்கு உபதேசிக்கும்படி கூரத்தாழ்வன் கேட்டபோது எம்பெருமானார், "ஒரு வருடகாலம் குரு சுச்ரூஷை நீர் செய்த பிறகே உமக்கு உபதேசிக்கவேண்டும் என்று நம்பி கூறியிருக்கிறார்" என்றார். "ஒருவருடம் இந்த உடல் நிலைத்திருக்க வேண்டுமே. ஆசார்யன் திருமாளிகை வாசலில் ஒரு மாஸம் ஒருவன் உபவாஸமிருந்தால், அது ஒரு வருஷ காலம் ஆசார்யனுக்கு பணிவிடை செய்ததற்கு ஸமம் என்று சாஸ்த்ரம் இருப்பதால் அடியேன் உபவாஸம் இருக்கிறேன்" என்று கூறி ஒருமாதம் உபவாஸம் இருந்தார். அவருடைய உறுதியைக் கண்ட எம்பெருமானார் அவருக்கு சரமச்லோகார்த்தத்தை உபதேசித்தார்.

முதலியாண்டான் வந்து எம்பெருமானாரிடம் வந்து 'அடியேனுக்கும் அர்த்தத்தை உபதேசிக்க வேண்டும்'? என்று கேட்டார். "நான் ஆழ்வானுக்கு மட்டுமே அனுமதி வாங்கிக் கொண்டு வந்தேன். எனவே திருக்கோட்டியூர் நம்பியிடமே சென்று கேளும்" என்றார் எம்பெருமானார்.

முதலியாண்டான் திருக்கோட்டியூர் சென்று நம்பியின் திருமாளிகையில் ஆறு மாத காலம் பணிவிடை செய்தார். ஆனால் திருக்கோட்டியூர் நம்பியோ வாய்திறந்து ஒன்றுமே பேசவில்லை. ஆறுமாதம் கழித்து, எம்பெருமானாரை எத்தனை நாள் பிரிந்திருப்பது என்று எண்ணி ஊருக்குப் போவதற்கு நம்பியிடம் அனுமதி கேட்டார்.

அப்போதுதான் நம்பி ‘‘எதற்காக இங்கு வந்தீர்?’’ என்று கேட்டார். ‘‘சரமச்லோகார்த்தம் கேட்க வந்தேன்’’ என்றார் முதலியாண்டான். ‘‘முக்குறும்பும் அறுத்தீரானால் எதிராசரே உமக்கு உபதேசிப்பார்’’ என்றார் திருக் கோட்டியூர் நம்பி. வித்யா மதம், தனமதம், அபிஜன மதம் அதாவது உயர்ந்த குலத்தில் பிறந்திருக்கிறோமென்ற செருக்கு, பணத்தை உடையோம் என்ற செருக்கு, நிறைய படித்திருக்கிறோம் என்ற செருக்கு ஆகிய கர்வங்கள் அற்றால் எம்பெருமானாரே உமக்கு உபதேசிப்பார் என்றார் நம்பி. முதலியாண்டானும் எம்பெருமானாரிடம் திரும்பி வந்தார். அப்போது எம்பெருமானார் ‘‘திருக்கோஷ்டியூர் நம்பி திருமாளிகையிலே கைங்கர்யம் பண்ணி எவ்வளவு பொலிவுடன் இங்கே வந்திருக்கிறார் முதலியாண்டான்’’ என்று கொண்டாடி அவருக்கும் சரமச்லோக அர்த்தத்தை உபதேசித்தார்.

இங்கேதான் நாம் ஒரு விஷயத்தை நெஞ்சில் நன்றாகக் கொள்ள வேண்டும். எம்பெருமானார் திருக்கோட்டியூர் கோபுரத்தின் மேல் ஏறி தெருவில் போவோர் வருவோருக்கெல்லாம் அர்த்தங்களை வாரியிறைத்தார் என்று பலர் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். கூரத்தாழ்வானுக்கே ஒருமாதம் உபவாசம் இருந்த பிறகுதான் உபதேசித்தார். முதலியாண்டான் ஆறுமாதம் திருக்கோட்டியூர் நம்பிக்குக் கைங்கர்யம் செய்தபிறகுதான் உபதேசம் பெற்றார். அப்படி இருக்கும்போது, கோபுரத்தின் மேலேறி, தெருவில்போவோர் வருவோருக்கெல்லாம் எப்படி உபதேசித்திருப்பார்? கோபுரத்தில் ஏறி, கண்டவர்களுக்கும் உபதேசித்தார் என்பது தவறு. ஆசையோடு கேட்ட சிலருக்கு மட்டுமே ஏகாந்தமாக உபதேசித்தார் எம்பெருமானார்.

இங்கு ஒரு ஸந்தேஹம் எழுகிறது. ‘‘இதில் (சரமச்லோகத்தில்) அர்த்தம் கேட்கைக்காகவிறே எம்பெருமானார் பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பிபக்கல் எழுந்தருளிற்று’’ என்று மணவாளமாமுனிகள் முமுக்ஷுப்படி சரமச்லோகப்ரகண வியாக்யான அவதாரிகையில் அருளிச்செய்கிறார். ஆனால் பதினெட்டு முறை வந்த எம்பெருமானாருக்கு திருமந்த்ரார்த்தத்தை உபதேசித்ததாக ஆறாயிரப்படி குருபரம்பரையில் கூறப்படுகிறது. இதில் எது சரியானது? என்பதுதான் ஸந்தேஹம்.

ஸ்ரீராமானுஜர் திருக்கோட்டியூர் நம்பியிடம் சரமச்லோகார்த்தம் கேட்கவேண்டும் என்றுதான் பதினெட்டு முறை எழுந்தருளினார். இறுதியில் நம்பி ‘‘அடுத்த முறை தண்டும் பவித்திரமுமாக நீர் ஒருவர் மட்டுமே வாரும், உபதேசிக்கிறோம்’’ என்று கூறினார். ஆனால் ராமானுஜர் செல்கின்றபோது கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் கூட அழைத்துக் கொண்டு வந்தபடியால், திருக்கோட்டியூர் நம்பிக்குப் பரம ரஹஸ்யமான சரமச்லோக அர்த்தத்தை உபதேசிக்க மனம் வரவில்லை. எனவே சற்றுக் குறைந்த ரகஸ்யமான திருமந்திரத்தை உபதேசித்து விட்டார். அதையே எம்பெருமானாரும் ஆசை உடையோர்களுக்கு வெளியிட்டார். மீண்டும் அடுத்தமுறை சென்று திருக்கோட்டியூர் நம்பியிடம் சரமச்லோக அர்த்தம் கேட்டார் எம்பெருமானார். அதனைக் கூரத்தாழ்வானுக்கும், முதலியாண்டானுக்குமே பலநாள்கள் கழித்துத்தான் உபதேசித்தார். இப்படிப் பார்க்கும்போது குருபரம்பரையில் உள்ளதும் மணவாளமாமுனிகள் அருளியதும் பொருந்திவிடுகிறது.

எம்பெருமானார் திருக்கச்சி நம்பிகள் மூலம் ஆறு வார்த்தைகள் பெற்றாற் போல, அவர் தமது இறுதிக் காலத்தில் நமக்கு ஆறு

வார்த்தைகளை அருளிச் செய்துள்ளதாக ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவ நூல் தெரிவிக்கின்றது. அந்த ஆறு வார்த்தைகளாவன:

**படித்வா பாஷ்யம் தத்ப்ரவசநம்,**
**அ*ஶ*க்தௌ *ஶ*டரிபோர்கிரி ச்ரத்தாவாஸ:,**
**ப்ரபுபரிசிதஸ்தாந நிவஹே ப்ரபோ:**
**கைங்கர்யம் வா, ப்ரபதநமநோரர்த்தமநநம்,**
**ப்ரபந்நாநாம் வா மே பவது பரிசர்யாபரிசய:,**
**குடீம் க்ருத்வா தஸ்மிந்**
**யதுகிரிதடே நித்ய வஸதி: ஷடர்த்தா**
**ஸ்ரீ*ஶ*ஸ்ய ப்ரபதநவிதௌ ஸாதகதமா:**

1. ஸ்ரீபாஷ்யத்தைக் கற்றுப் பிறருக்குக் கற்பித்தல், 2. அது இயலாவிடில் நம்மாழ்வார் முதலானோருடைய அருளிச் செயல்களில் ஈடுபட்டு ஓதியும் ஓதுவித்தும் செல்லுதல், 3. அது இயலாவிடில் எம்பெருமான் உகந்தருளின நிலங்களில் அமுதுபடி சாத்துப்படி முதலானவற்றை உண்டாக்கிக் கொண்டு போருகை. 4. அதுவும் இயலாவிடில் ப்ரபத்தி மந்த்ரமான த்வயத்தை அநுஸந்தித்தல் 5. அதுவும் இயலாவிடில் என்னுடையவன் என்று அபிமானிப்பான் பாகவதனுடைய அபிமானத்தில் ஒதுங்குதல். 6. அதுவும் இயலாவிடில் திருநாராயணபுரத்தில் ஒரு குடில் கட்டிக் கொண்டு வசித்தல் – என்ற ஆறு வார்த்தைகளை எம்பெருமானார் அருளிச் செய்துள்ளார்.

திருநாராயணபுரம் என்றது அர்ச்சாவதாரமாக எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் எல்லா திவ்ய தேசங்களுக்கும் பொருந்துவதாவே கொள்ளலாம். ஒரு திவ்ய தேசத்தில் வாஸம் பண்ணினால், இந்த ஆறுமே நமக்கு ஸித்தித்துவிடும்.

ஆறாம் வார்த்தையான திருநாராயணபுரம் போன்ற திவ்ய தேசத்தில் வசித்தால் அங்கு எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீவைஷ்ணவரின் அபிமானத்தில் ஒதுங்கி இருக்கும் வாய்ப்பு ஏற்பட்டு ஐந்தாம் வார்த்தை ஸித்திக்கும். அவரோடு தொடர்பால் அவரைப் போலவே நமக்கும் த்வயமந்த்ரத்தை அனுஸந்திக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு நாலாம் வார்த்தையும் ஸித்திக்கும். த்வயத்தில் சொன்னபடி கைங்கர்யத்தை கோயிலில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு முதலில் அமுதுபடி சாத்துப்படி கைங்கர்யங்கள் செய்யும் நிலை ஏற்பட்டு மூன்றாம் வார்த்தை ஸித்திக்கும். கோயிலுக்குச் சென்றால் அங்கே பலர் திவ்யப்பிரபந்தங்களை ஸேவிப்பதைப் பார்த்து நமக்கும் ஸேவிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகி இரண்டாம் வார்த்தை ஸித்திக்கும். அதற்குப் பிறகு அப்பாசுரங்களின் அர்த்தத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். அப்பாசுரங்களில் வேதாந்த விஷயங்களே கூறப்படுவதால், ஸ்ரீபாஷ்யம், கற்கவேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட்டு முதல் வார்த்தையும் ஸித்தித்துவிடும். இப்படி, படிப்படியாக உடையவர் அருளிய ஆறுமே நமக்கு ஸித்தித்துவிடும். இப்படி எம்பெருமானார் தம்முடைய இறுதிக்காலத்திலும் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் உய்வு பெறுவதற்கான வழிகளைக் காட்டிவிட்டே உபதேசித்துத் திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

இப்படிப் பல்வேறு வகைகளில் பெரும் தொண்டுகளை இவர் புரிந்து ஸ்ரீவைஷ்ணவ மதத்திற்கு முதல்வராக இவர் திகழப்போகிறார் என்பதை முன்பே அறிந்து கொண்டிருந்தபடியால்தான் ஆளவந்தார் எம்பெருமானாரை 'ஆம் முதல்வன்' என்று கடாக்ஷித்தார் என்பதும் அப்படி அவர் கடாக்ஷித்தபடியால்தான் எம்பெருமானாரும் நம் ஸம்ப்ரதாயத்தின் முதல்வரான ஆனார் என்பதும் நன்கு உணரத்தக்கது.